## க.பொ.த. (உ.தரம்) உதவிக் கருத்தரங்கு - 2016

## தமிழ் வினாத்தாள் I - பகுதி I

## விடையளித்தலுக்கான வழிகாட்டல்

**1.** (i) (அ) தலைவியை தனிமையில், இரவு வேளையில் சந்திக்கும் நிலை மறுக்கப்பட்டபோது தோழியின் உதவியை நாடி நிற்கும் தலைவனின் மனநிலை.

(ஆ)
- உள்ளத்து உணர்வுகளை ஒழிவு மறைவின்றி வெளிப்படுத்துகின்றமை.
- எண்ணியதை அடைய உதவியை நாடுகின்றமை.
  - தான் எண்ணிய வழியில் தலைவியை சந்திப்பதற்காக தோழியின் உதவியை நாடுகின்றமை.
- வெளிப்படும் ஆசையை கட்டுப்படுத்த முடியாமை.
- தான் எண்ணியதை நியாயப்படுத்துகின்றமை.

(இ)
- தலைவனது உள்ளத்தை முன்னிறுத்தி உரையாடுவதற்கூடாக உணர்வுகளைத் துல்லியமாக வெளிப்படுத்துகின்றமை.
- தலைவனது உள்ளத்து வெளிப்பாட்டிற்கு ஊடாக சமூகக் கருத்துக்களை விமர்சிக்கின்றமை. (களவொழுக்கம், வரைவு கடாவுதல்)
- உவமை அணியைப் பொருத்தமுறக் கையாண்டமை.
  - பெனீர்க்கேற்ற பசுங்கலம்போல
    உள்ளந் தாங்கா வெள்ள நீந்தி
  - உயர்கோட்டு மகவுடை மந்திபோல
    அகனுறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே.

(ஈ)
- காதல் ஒழுக்கம்.
- இயற்கை வர்ணனை இடம்பெறல்.
- தலைவன் கூற்றாக அமைதல்.
- பெயர் சுட்டாப் பண்பு.
- இரவுக்குறி, வரைவு கடாவுதல், அலர்தூற்றுதல். (குறிப்பாகப் பேசப்படுத்தல்.)

(ii) (அ) அசுஹாபிகளுள் (நபித்தோழர்) ஒருவரான சுலைக்கு (றலி) என்பவர் முஹம்மது நபி (ஸல்) அவர்களிடம் மழையின்மையால் மக்களடைந்த துயரினைக் கூறி இறைவனிடம் பிரார்த்தனை (துஆ) செய்யுமாறு வேண்ட, பெருமானாரும் துஆ செய்ய இறைவன் இரங்கி கருணை செய்த வேளையில் மழைமுகில் கருக்கொண்டமை.

ஆ. வீட்டில் இருந்து உண்பதற்கு எதுவும் கிடையாத மனவருத்தமானது அதிகரித்து, உள்ளமானது கலக்கமடைந்து இவ்வுலகிலுள்ள இடங்கள் யாவற்றிற்கும் சென்று அலைந்து திரிந்தவர்கள், பல பொன் முதலான திரவியக் குவியல்கள் முன்னேவர அவற்றை விரோதமில்லாமல் எடுத்து வீட்டினுள் புதைத்து வைத்தவர்களின் நெஞ்சமாகிய தாமரையின் மகிழ்ச்சியைப் போன்று மனம் மகிழ்ந்து, இவ்வுலகிலுள்ள இடங்கள் முழுவதும் போற்றும் வண்ணம் கருமையான நிறத்தைக் கொண்ட மழை முகிலானது கருக்கொண்டது.

இ. உவமை அணி:

- உண்பதற்கு எதுவுமற்று மனங்கலங்கி எல்லா இடங்களிலும் அலைந்தவர்களுக்கு பொற்குவியல் கிடைத்தது போல உலகின் எல்லா இடங்களும் போற்றும் வண்ணம் கரிய முகில் கருக்கொண்ட காட்சி உவமை அணி மூலம் விளக்கப்பட்டுள்ளது.
  உண்பதற்கு எதுவுமற்று அலைந்து திரிந்தவர்களுக்கு
  பொற்குவியல் கிடைத்தமை - உவமானம்
  வரட்சிமிக்க பூமியில் மேகம் கருக்கொண்டமை. - உவமேயம்
  அவசியமாக எதிர்பார்க்கப்பட்டது, அதற்கும் மேலாக
  கிடைத்தமையால் உண்டாகிய மகிழ்ச்சி - பொதுத்தன்மை

ஈ. உருவக அணி

- இதய பங்கயம்
  முகிலாகிய கரு

**2.** (அ) (i) இன்று உனக்கும் சம்பளமா? என்னும் தலைப்பு இக்கவிதைக்கு மிகவும் பொருத்தமாகும். சம்பள நாள் சந்தோஷம் அற்ற நாளாக காணப்படுகின்றது.

- ஓயாமல் இரைந்து கொண்டிருப்பது கடல், அதன் அலைகள் குமுறி எழுந்து மோதுவது போன்று ஏழை ஆசிரியனது மனக்குமுறல்களும் மனத்தில் எழுந்து மோதுகிறது.
  இந்த மோதல்களின் பிரதியலிப்பாகவே அவர் கடலை நோக்கி இன்று உனக்கும் சம்பளமா? எனக் கேட்பது,

- சம்பள நாளன்று ஆசிரியனது உள்ளத்தில் எழும் துன்ப அலைகள் கடல் அலைகள் போன்றிருப்பதாகக் கவிஞர் கடலின் மீது ஏற்றிப்பாடுவது பொருத்தமானதாகும்.

- தனது துன்பங்களை, அவலங்களை, இயலாமையை விரக்தியை, ஆதங்கத்தைக் கடலுடன் பொருத்திப் பார்க்கும் கவிஞரின் உத்தி, இன்று உனக்கும் சம்பளமா? என்னும் தலைப்பு இக்கவிதைக்கு பொருத்தமானதாகும்.

- சம்பள நாளிலே வாழ்க்கை சிக்கல் மிகவும் உணரப்படுவதால் கடற்கரையில் நிற்கும் கவிஞர் இன்று உனக்கும் சம்பளமா என்று கடலிடம் வினாவுவது.... இக்கவிதைக்கு பொருத்தமானதாகும்.

(ii) ஏழை வீட்டில் பிறந்தனையோ?
கடலே நீ ஏன் ஓயாது ஒலித்துக் கொண்டிருக்கின்றாய். இன்று உனக்கும் சம்பள நாளா? நீயும் என்னைப்போல் ஒரு ஏழையின் வீட்டில் தான் பிறந்தனையோ என்பதன் மூலம் ஏழ்மை நிலை வெளிப்பட்டு நிற்றல்.

- பிய்ந்து போன செருப்பு
  பாவித்து பாவித்து தேய்ந்து போன செருப்பு கழன்ற நிலை.

- பாற்சோறும் பட்சணமும் (பலகாரங்களும்) படைப்பதற்கு உன்னிடத்தில் பணமா இல்லை.

- வேட்டி சனத்திற்கு மத்தியில் கிழிதல்.
  “யப்பானார் இறக்குகின்ற
  புறாமார்க்கு மல்வேட்டி
  அடடா “டப்டப்”
  சம்பென்று மூச்சுவிட்டு
  சல்லடையாய் மாறிற்றோ?

- பழைய கட்டறுந்த குடை தொலைந்தமை.

- மகள் கமலா காசு கேட்டும் கொடுக்க முடியாத நிலை.

- கடன் கொடுத்தவர் ஏசியது.
  “சில்லறைக்குக் கடன் தந்த அலியார் நானா பொல்லாத வார்த்தையெதும் புகன்றாரோ?

- கடன்காரர் வீட்டுவாசலில் வரிசையாக நின்றமை.

- மாலைப் பொழுதாகி இரு சாமங்களையும் கடந்து விட்டது. கடன்காரர் எவரும் அங்கே வாசலில் நிற்கமாட்டார்கள்.

[ பக் 3 ஐப் பார்க்க

(iii) இக்கவிதையில் கவிஞர் உவமை, உருவக அணிகளைக் கையாண்டுள்ளார்.

- உவமை அணி :
  அல்லாஹ் போல் அனுதினமும் சில்லறைக்கு கடன் தந்த அலியார் நானா
  உவமானம் : அல்லாஹ்வின் அருட்கொடை.
  உவமேயம் : அலியார் நானாவின் கடனுக்குப் பொருட்கொடை
  பொதுத்தன்மை : கொடைத்திறம்

- உருவக அணி
  - தேன் கடலாய்
  - இல்லாமையாம் கொடிய நோயை (வறுமை நோயாக உருவகித்தல்)

(iv)
- வறுமை என்ற இயலாமையின் நிமித்தம் ஆசிரியருடைய மனம் நொந்து வேதனைப்பட்டமை.
- இயலாமை எனும் கொடிய வறுமை நோயைப் போக்க வழிமுறை (மருந்து) ஒன்றையும் காணாது தவிர்த்தமை.
- இறுதியில் விதிமீது பாரத்தைப்போட்டு வீடு சென்றமை.

**3.** அ. வினைத் தூய்மையின் சிறப்புப் பற்றி வள்ளுவர் கூறுவன,
ஒருவனுக்கு வாய்த்த துணையின் நன்மை செல்வத்தை மாத்திரம் கொடுக்கும்; அவனது செயலின் நன்மையோ அவன் விரும்பியதைக் கொடுக்கும்.

ஆ.
- அரசனுக்கு இம்மையிலே புகழையும் மறுமையிலே அறத்தையும் பயனாகத் தராத செயல்களை எக்காலத்தும் அமைச்சர் தவிர்க்க வேண்டும்.
- மேலும் உயர்வடைய விரும்பிச் செயற்படுவோர் தமது புகழ் கெடுவதற்குக் காரணமான செயல்களைத் தவிர்த்தல் வேண்டும்.
- சலனமற்ற தெளிவினை உடையவர்கள் தாம் துன்பமடையினும் தம்மைப் பிறர் இழிவாகக் கருதும் செயல்களைச் செய்ய மாட்டார்கள்.
- தான் செய்தது எத்தன்மையது என்று கழிவிரக்கம் கொள்ளத்தக்க செயல்களைச் செய்யாது விடுக. ஒருமுறை அச்செயலைச் செய்தாலும் மீண்டும் அத்தகைய செயலைச் செய்யாது விடுதல் நல்லதாகும்.
- தன்னைப் பெற்ற தாயின் பசிகண்டு இரங்குபவன் ஆயினும், அப்பசியுண்டான வறுமையைத் தீர்க்கும் பொருட்டு, அறிவுடையோர் பழிக்கத்தக்க செயல்களைச் செய்யக் கூடாது.

இ.
- ஒழுக்கமில்லாதோர் பழியையும் பொருட்படுத்தாது தீயச் செயலைச் செய்து பெற்ற செல்வத்திலும் பார்க்க அத்தகைய செயல்களைச் செய்யாது தூய்மைகாத்த அறிவுடையோர் வறுமை உயர்ந்ததாகும்.
- நூலோர் விலக்கிய செயல்களைச் செய்த அமைச்சருக்கு, அவை ஒருவாறு நிறைவேறினாலும் பின்னர் துன்பத்தையே கொடுக்கும்.
- பிறர் அழுமாறு தீவினை புரிந்த ஒருவன் பெற்றுக்கொண்ட பொருள்கள் யாவும் அதனைப் பெற்றவன் அழுமாறு நீங்கிப்போகும். தூய்மையான வழிகளில் வந்த பொருள்கள் இழக்கப்படினும் ஒரு காலத்தில் அவை மீண்டும் வந்து பயன் தரும்.
- அமைச்சர் தீய செயல்களால் பொருள் சேர்த்து அதனால் அரசனுக்குப் பணி செய்தல், பச்சை மண்ணாலான பாத்திரத்தினுள் நீரை ஊற்றி வைத்தது போலாகும்.

ஈ. தீய செயல்களால் பொருள் படைத்து அரசனுக்கு பாதுகாவல் உண்டாக்கும் செயலிற்கு, பச்சை மண்ணாலான மண்கலத்தில் நீர் ஊற்றி வைக்கும் செயல் உவமிக்கப்படுகின்றது.
பச்சை மண்ணாலான மட்கலத்தில் நீர் ஊற்றி வைத்தால் மட்கலமும் உடைந்து நீரும் சிந்திவிடும். அதுபோல தீச்செயல்களால் படைத்த பொருள் கொண்டு அரசனைப் பாதுகாக்க முற்பட்டால் பொருள் கெட்டு அரசனும் அழிந்து விடுவான் என்பதாகும்.

[ பக் 4 ஐப் பார்க்க

**4.** (அ) • கணவர்மார் பள்ளி எழுவதற்கு முன்னர் பெண்கள் துயில் நீங்கி எழுந்தமை.
- கனவிலும் இராமன் பற்றிய நினைவு (பெண்களில் சிலர் இராமனை கனவில் சேர்வதாக கனவு கண்டமை)
- கன்னிப் பெண்கள் உறக்கம் வராமல் கண்மூடி பொய்யுறக்கம் கொண்டமை.
- செப்பம் செய்யப்பட்ட மலர்க்குவியல் படுக்கையைக் கூட உதறிவிட்டு விழாக்காணும் ஆசையினால் படுக்கையினின்றும் எழுந்தமை.
- மகளிர் தம் கணவர்மாருடன் ஊடலைச் செய்துவிட்டு கூடலைத் தவிர்த்தமை.

(ஆ) • கைகேயி நினைத்ததை சாதிப்பதற்கு எதையும் இழக்கத் துணிந்தமை.
- கணவன் என்ற உறவை இழக்கத் துணிதல்.
(கணவன் உயிர் போகுமாறு செயல்புரிதல்)

- அடிக்கடி குணங்களை மாற்றும் இயல்புடையவள்.
- தசதரனுடன் உயிர் ஒன்றுபோல் வாழ்ந்தவள்.
- அவன் உயிர் விடவும் காரணமாக இருந்தமை.
- தசரதன் பெருந்துன்பம் அடையவும் இரக்கமற்று சிரித்தமை.

- புகழ், பெருமை, அறம், நற்செயல் யாவற்றையும் அலட்சியப்படுத்தும் மனப்போக்கு கொண்டவள்.
- இயற்கைக்கு விரோதமான காரியத்தால் உலகே அழிவுறும் என்பதைக் கருதாமை.
- பகுத்தறிவற்ற உயிரினங்களே துன்புறுவதற்கும் கோபமடைவதற்கும் காரணமாக அவளுடைய செயல் இருந்தது .

- நீண்டகாலம்நிலைத்திருக்கக் கூடிய கொடிய பழியை ஏற்க மனங்கொண்டமை.
தசரதன் உயிர் விடவும், இராமன் காடாளுதலுமாகிய பின் நிகழ்வுக்குரிய கொடிய பழிச் செயலைச் செய்தமை.

- நற்குலப் பெண்டிர்க்குரிய குணத்தை இழந்து இழிவான பண்புகளை வரித்துக்கொண்டமை.

நற்குலப் பெண்டிர் வாய் அடங்குதல்.
தீமையை தனக்கிடமாகக் கொண்டமை.
அறிவிழந்த தீவினை முதிர்ந்த கைகேயி
கேகயத்து அரசன் பயந்த விடம்
கேடு சூழ் மா கயத்தி

- பெருமைக்குரிய புகழை சிதறவிட்டு பழியைத தனக்கிடமாகக் கொண்டதோடு குலத்திற்கும் பழியைத் தேடியமை.

(இ) • வாத்தியங்கள் முழங்குதல்
- பேரிகை முரசங்கள் ஒலித்தமை.
- யாழிசை ஒலித்தமை.
- பம்பை வாத்தியங்கள் பேரொலி செய்தமை.
- ஊது கொம்புகள் ஊதப்பட்டமை.
- வாத்தியங்கள் அளவின்றி ஒலித்தமை.

- பீலிக் குஞ்சுகள் அசைந்தமை.
- பறவைகள் ஒலி செய்தமை.
- இசைப்பாடல்கள் ஒலித்தமை.
- சாம வேத இசை வகைகள் நிரம்பியமை.
- பெண்களது அணிகலன்கள் காற் சிலம்புகள் ஒலித்தமை.
- குதிரை மேகங்கள் முழங்கியது போல கனைத்தமை.

[ பக் 5 ஐப் பார்க்க

(ஈ) கைகேயியின் தீய செயலைப் பார்த்து இரவு என்னும் பெண்ணானவள் ஆடவர் முன்னே நிற்பதற்கும் வெட்கப்படுகின்றமை.

- தசரதனது துயர் பொறுக்காது, கைகேயியின் செயலைப் பார்த்து கோழிகள் சிறகுகளைத் தம் வயிற்றில் அடித்துக்கொண்டுகூவி அழுகின்றமை.
- பறவைகள் கைகேயியின் செயல்கண்டு திட்டுதல் போல ஒலி செய்தமை.
- இராமன் நாடுவிட்டுக் காடு செல்கின்றமையால் தாமும் செல்வோமென யானைகள் தாம் உறங்குமிடத்திலிருந்து எழுந்தமை.
- முத்துக்களைக் கொண்ட வானத்தில் வேயப்பட்டிருந்த பந்தலைப் பிரித்துவிட்டதுபோல் வானத்தில் விண்மீன்கள் மறைந்தமை.
- கைகேயியின் கொடிய செயலைப் பார்த்து குலமகளிர் வாய் மூடினாற்போல் செவ்வாம்பல் மலர்கள் குவிந்தமை.
- கைகேயி மேற் சினங்கொண்டு கிழக்குத்திசையால் கதிரவன் உதிக்கின்றமை.

குறிப்பு : இவை ஏன் தற்குறிப்பேற்றம் என்பதை விளக்குதல் வேண்டும்.

**5.** அ. பேரொளி பொருந்திய வானதூதன் கூறிய கொடிய வார்த்தகள் சூசையின் உள்ளத்தினை பலவாறு வருத்தின.

- நெருப்பில் மூழ்கிய பசுமையான பூந்தாது.
- கண்ணில் பாய்ந்த வேல் அகன்ற வாயை உடைய புண்ணின் துவாரத்தினுள் நுழைந்த செந்தீ எனத் துன்புற்றமை.
- நெடிய கடல் நீரில் உண்டான சுழியில் மூழ்கியதாய் துன்புற்றமை.
- பூவிலும் மென்மையான குழந்தையின் இளமையையும், நிழலில் வளர்ந்து மலர்ந்த பூங்கொம்பு போன்ற மரியாளின் மென்மையையும் நினைத்து கவலை அடைந்தார்.
- எகிப்து நாட்டின் தூரமும் சூசையின் மனதில் பெரும் துயரத்தை ஏற்படுத்தியது.

ஆ. திவ்விய பாலனுடைய பெருமைகள்

- யேசு பாலனை இளஞ்சூரியனை போன்ற அழகிய முகத்துடன் அன்னக்குஞ்சுபோல உறங்கினான் எனக் குறிப்பிடுதல்.
- கனிந்த முகத்துடன் சூசை, மேரி ஆகிய இருவருக்கும் ஆசி வழங்கியமை.
- பத்தாயிரம் வானவர்கள் பிரகாசமான ஒளியைப் பாய்ச்சி இசைநயம் கனிந்த பாடல்களோடு வாழ்த்தி அழைத்துச் சென்றமை.
- கொல்லும் இயல்புடைய மக்களின் பாவச் செயலை நீக்குவதற்காக அவதாரம் எடுத்த குணச் செம்மல்.
- பாவ இருளை போக்க மனித அவதாரம் எடுத்தவர்.

இ.
- ஊரானது எவ்விதமான ஆரவாரமும் இன்றி அடங்கிக் கிடந்தமை.
- வாரினால் கட்டப்பெற்ற முரசுகள் முழங்காமை.
- வரிகள் பொருந்திய சங்குகள் ஊதப்படாமை.
- தெருவில் ஆரவாரமோ சன நடமாட்டமோ காணப்படாமை.
- அமைதியுடன் காணப்பட்ட ஊரானது உயிரற்ற செத்த உடம்புபோல் விளங்கியமை.
- நல்வினைகள் நகரை விட்டு நீங்கியமை.
- ஒரு நாட்டினைப் பொலியச் செய்யும் அருள், அன்பு, பொறுமை, நீதி, வீரம், சிறப்பு, பெருமை, உறுதி, ஞானம், பொருள், புகழ், புலமை என அத்தனை நலன்களும் நீங்கிச் சென்றமை.
- பாவச்செயல்களில் ஈடுபட்டதனால் நாடும் நகரமும் அறியாமை எனும் இருளில் மூழ்கியமை.

ஈ.
- சூசையப்பர், மரியாள் அடைந்த துயரம், ஏசுபாலனின் பெருமை, நாடுநகர் அடைந்த நிலை ஆகியன தத்துரூபமாக சித்திரிக்கப்பட்டுள்ளமை.

[ பக் 6 ஐப் பார்க்க

- சொற்கள், சொற்றொடர்கள், அணிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தியுள்ளமை.

உ-ம் : உவமை அணி - புலியின் நிழலைப் பார்த்து ஏங்கிய மான் போல மனம் கலங்கிப் புலம்பினான்.

"உலைமுகந்த அரும் தழற்கு உருகி ஏங்கினாள்."

மரியாள் உலைக்கலத்தினின்றும் வெளிப்படும் அரிய நெருப்பு போன்று மனம் உருகினாள்.

உருவக அணி - அறக்கடல்

உயர்வு நவிற்சி அணி - சூரியனின் ஒளி கெடும் வண்ணம் ஒளியுள்ள மேனியைக் கொண்ட வானவர்கள்.

**6.** அ.

- தாய்மை உணர்வைத் துல்லியமாகப் புலப்படுத்தும் வகை மாதிரிப் பாத்திரமாக உருவாக்கப்பட்டமை.
- சராசரி கிராமியத் தாயாக சித்திரிக்கப்பட்டமை.
- வசதியாக வாழ்ந்தாலும் கணவன் இறந்தபின் குடும்பப் பாரத்தைப் பொறுப்பெடுக்கத் துணிந்தமை.
- தன் கடமையை நிறேவேற்றத் தன்னை அர்ப்பணித்து கடுமையாக உழைத்தமை.
- எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றமானபோது அதை தாங்கிக் கொண்டமை.
- மகளிற்கு சாதாரணமாக அமைந்த சம்பவம் தாய்க்கோ மிகப்பெரும் தாக்கத்தை உண்டு பண்ணியதாக அமைந்துவிடுகின்றமை.
- சம்பவத்திலிருந்து மீள முடியாதவளாகி அடுத்தவர்க்கு எடுத்துக்கூறி ஆறுதல் தேடும் தாயாக சித்திரிக்கப்பட்டிருக்கின்றமை.
- கதைப் பொருளை ஆரம்பம் முதல் முடிவுவரை விளக்கிய நகர்த்திய முதன்மைப் பாத்திரமாக உருவாக்கப்பட்டுள்ளமை.

ஆ. தாயின் உணர்வைவிட போலிக் கௌவரவத்திற்கே முதன்மை கொடுப்பவள்

- செயலாலும் வார்த்தையாலும் வெளிப்படுத்துதல்.
- தாய் வந்தவுடன் சிரிக்காதிருத்தல், ஏன் வந்தனீ? எனக் கேட்டல், வேலைக்காரி எனக் கூறுதல், பணத்தை வாங்கியவுடன் திரும்பிச் செல்லல்.
- வரட்டுக் கௌரவத்தால் தாயைக் கூட மதிக்காத தன்மை.
- தாயின் உணர்வுகளை மதிக்காத போக்கு.

இ.

- கொட்டியாரத்திலிருந்து மல்லிகைத் தீவிற்கு செல்லும் போக்குவரத்துப் பாதை களமாக அமைந்துள்ளமை. அத்துடன் கதையை நகர்த்திச் செல்லும்போது மல்லிகைத் தீவின் வயல் நில வர்ணனை மக்கள் வாழ்க்கை என்பன வர்ணிக்கப்பட்டுள்ளன.

ஈ.

- தாயின் கூற்றாகக் கதையை நகர்த்திச் செல்கின்றமை - தனிநிலை உரையாடல் எனக் கூறலாம்.
- தன்னுணர்ச்சி வெளிப்பாடு
- நனவோடை உத்தியில் வடிவமைக்கப்பட்டமை
- முரண் பாத்திரச் சித்திரிப்பு
  தாய் - தாய்மை உணர்வு
  மகள் - போலிக் கௌரவத்திற்கு முதன்மை கொடுக்கின்றமை
- கிராமியப் பின்னணியை வெளிப்படுத்தும் மொழிநடை.
  - உவமைத் தொடர்களின் பொருத்தப்பாடு
  - "வெளிக்குளத்துக்குள்ள பொழுதுபடக்குள்ளே கூம்பி நிற்கிற தாமரைப் பூவைப் போல"
  - "ராசா ஏறின குதிரை மாதிரி"
  - "தெகைப் பூண்ட மிரிச்சவள் போல்"
  - "பூமி பிளந்து என்னை விழுங்கினாப்போல"
  - பொருத்தமான பழமொழிகள்
  - தைத் தூத்தல் தலை நனையாது.
  - நாய்க்கு நடுச்சமுத்திரத்திலயும் நக்குத்தண்ணிதான்.

[ பக் 7 ஐப் பார்க்க

- மரபுச் சொற்றொடர்
- சதுரத்தைச் சாறாப் புழிஞ்சு
- பேச்சுத்தமிழிப் பயன்பாடு
- பழுதாப்போனாலும்
- சேல
- வெள்ளாம
- அசத்து
- புரட்டி
- பிற மொழிச் சொற் பயன்பாடு
- மட்காட்டு
- றோட்டில
- எலவன்ஸ்
- ரவுண்

• கிராமியப் வாழ்வின் அம்சங்களை மையமாகக் கொண்டு கதையை நகர்த்திச் செல்கின்றமை.
  - வாழ்விடம்
  - தொழில்
  - உணவு, பழக்க வழக்கங்கள், தொழில்

• வர்ணனைப் பயன்பாடு
  - வீதி, மல்லிகைத்தீவுக் கிராமம், பொதிசோறு, மகளின் அழகு ஆகியன வர்ணிக்கப்படல்.

**7.** (i)
• தமிழ்மொழி குறிப்பிடத்தக்க ஒரு சமூகத்திடம் தாய் மொழியாகச் செல்வாக்குப் பெற்று வந்தமை.
• தென்னிந்தியாவில் வாழ்ந்த பௌத்தர்கள் இலங்கையில் வாழ்ந்த பௌத்தரோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாக இருந்தமை.
• ஈழத்துத் தமிழ் இலக்கியப் பெரியார்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பு.
• இரகுவம்சம், தட்சிணகைலாய புராணம் முதலியவை இடைக்காலத்தில் தோற்றம் பெற்றமை.
• சிங்கள மொழியில் தமிழ்மொழிச் சொற்கள் சில வழங்கி வந்தமை - பத்தினி தெய்யோ
• தமிழ்நாட்டுப் பாடலின் அடிமுறையை ஒத்தாக சிங்கள மொழிப் பாடல்களின் அடி வரையறைகள் காணப்படுகின்றமை.

(ii)
• ஊசல் விழா, தாய்லாந்தின் தேசிய விழாவாக இடம்பெறுகின்றமை.
  இது தமிழகத்தின் பாவைநோன்பின் திரிந்த வடிவமாகக் கொண்டாடப்படுகின்றமை.
• தாய்லாந்தில் கொண்டாடப்படும் மழைத்திருவிழா திருவெம்பாவையுடன் தொடர்புபட்டதாக காணப்படுகின்றமை.
• திருமுறைப்பாடல்கள் மந்திரங்களாக ஓதப்படுகின்றமை.
• விஷ்ணுவை “சுகோதயப் பெருமாள்” என அங்கு அழைக்கப்பட்டமை.
• சுகோதய என்பது தாய்லாந்தில் பெயராகவும் பெருமாள் என்பது விஷ்ணுவின் தமிழ்ப் பெயராகவும் விளங்கியமை.
• நாராயணயே நமக்கே பறை தருவான் என்ற பாடலடி அங்கு இடம் பெற்றமை.
• தாய்லாந்தில் பிராமணர்கள் இராஜகுருவாக மதிக்கப்பட்டமை.
• தாய்லாந்தில் திருக்கடைத்திறப்பு கைலாயக் கதவுகளின் திறப்பு என அழைக்கப்பட்டமை.

(iii)
• சிங்கன் எனும் பெயர் தொலை கிழக்கு நாடுகளில் செல்வாக்குப் பெற்றமை. பல்லவர் காலத்தில் நரசிம்மன், இராசசிம்மன் எனும் பெயர் கொண்ட இருவர் நாட்டை ஆண்டு வந்ததாகவும் அவர்களுடைய பெயர்கள் தொலை கிழக்கு நாடுகளில் வழங்கப்பெற்றுள்ளமை.
• பர்மாவில் கிடைத்துள்ள தமிழ்க் கல்வெட்டுக்கள் மூலம் அந்நாட்டில் தமிழ்ச்செல்வாக்குப் பரவியதனை அறிய முடிகின்றமை.
  நந்திவர்மனின் சிறப்புப் பெயரான “அவனி நாராயணன் என்ற பெயரில் கொடைகள் வழங்கியமைக்குச் சான்று கிடைத்துள்ளமை.

[ பக் 8 ஐப் பார்க்க

- கிழக்குக் கடற்கரைப் பிரதேசத்தின் காவல் தெய்வமாக மணிமேகலை விளங்கியமையும், அப்பெயரில் தமிழ் நாட்டில் காப்பியம் ஒன்று எழுந்தமையும்.
- கீழைக்கடற்பகுதியில் கரும்பினைச் கொண்டு வந்தோர் அதியமானின் முன்னோர் எனல்.
- வணிகமன் சாதுவன் நாகர்களை பௌத்த மதத்திற்கு மாற்றியமை.

(iv)
- எளிமையானதும் வாசித்து விளங்கிக் கொள்ளக் கூடியதுமான மொழிநடை
- ஆய்வு முறையிலான தேடல்கள் அடங்கிய விபரண முறையில் அமைந்திருத்தல்.
- சான்றுகள் எடுத்துக் காட்டியும், பல்வேறு அறிஞர்களதும் கருத்துக்களை எடுத்துக்காட்டியும் விளக்குதல். தமிழ் இலக்கிய நூல்களான புறநானூறு, மணிமேகலை தேவாரம் முதலியவற்றை ஆதாரமாகக் கொள்ளுதல்.
- தேவையான இடங்களைத் தவிர்த்து ஏனைய இடங்களில் தூயதமிழ்ச் சொற்களைக் கையாண்டுள்ளார்.
- தமிழக வரலாற்றோடு தொடர்பான விடயங்களை தென்கிழக்கு நாடுகளின் வரலாற்றோடு இணைத்து நோக்குதல்.
- பிற மொழிச் சொற்களுக்கு உரிய தமிழ்மொழிச் சொற்களைப் பிரயோகித்தல்.
  உ-ம் : micro-film copy - நுண்பட நகல்
- ஆங்கில மொழிச் சொற்களை ஒலி பெயர்த்து எழுதியுள்ளார்.
  உ-ம் : குவாரிச் (Quaritch)

**8.** (அ)
- தனக்கு முன்னால் உள்ளவர் அரசனாக இருப்பினும் அவரை எதிர்த்துக் கூறும் மனோதிடம். (எதிர்ப்புணர்வு, ஏளனம் என்பன புலப்படுத்தப்படுகின்றன.)
- நின்னை அறிந்தோ தமிழை ஓதினோம் என்பதில் புலமைத்துவம் பெரிதாகக் கூறல்.
- தமிழ்ப் புலவனின் ஆளுமை, நம்பிக்கை சுயகௌரவம் புலப்படுத்தப்படுகின்றது.
- கற்றோற்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதைத் திடமாகக் கூறுவர்.

(ஆ)
- மலைவளம் கூறுவதனூடாக இயற்கையில் இறைவனைக் காணுதல்.
- வன ஜீவராசிகளினதும் வனவாசிகளினதும் வாழ்வியலை தமிழ்ப்பண்பாட்டுச் சூழலினூடாக வெளிக் கொணர்தல்.
- புராணக் கதைகளினூடாக இறைவன் பெருமையை வெளிப்படுத்துதல்.
  - திரிபுரம் எரித்தமை
  - மாலும் அயனும் அடிமுடி தேடியமை

(இ) நாட்டுச் சிறப்பு
- இயற்கை வளம்
  - மலைவளம் : உழவன் உழாமல் நான்கு வகை உணவுப் பொருளைத் தரவல்லது.
  - மலையின் உயரம் : வானத்தை ஒத்ததாக அவன் மலை உயர்ந்து விசாலமானது.
  - நீர் வளம் : வானத்து மீன்களை ஒத்த சுனைகள் உடையது.
- கொடைச் சிறப்பு
  போர் செய்து பாரியை வெல்ல முடியாது இரந்து சென்றால் தன் நாட்டையும் குன்றையும் ஒன்றாகக் கொடுக்கும் கொடை திறன் மிக்கவன்.
- வீரம்
  மூவேந்தர்கள் ஒன்று கூடி முயன்றாலும் பாரியின் பறம்பு மலையை வெல்ல முடியாது. வாள் வலிமையாலும் வெல்ல முடியாது.

(ஈ) நீண்ட பயணம் நாவல் வெளிப்படுத்தும் வாழ்வியல் அம்சங்கள்
- இயல்பு வாழ்க்கையில் சாதி முறைமை ஏற்படுத்திய தாக்கங்கள்.
- வழிபாடுகள்
- சடங்குகள்
- உணவு, பழக்கவழக்கங்கள்.
- ஆடை அணியும் முறைகள்
- அடக்கு முறைகள்
- தொழில் முறைமை
- வாழிடம்

* * *

**விடைக் குறிப்புக்கள்**
**பகுதி I**

| வினா | விடை |
|---|---|
| 1.1 | 1 |
| 1.2 | 2 |
| 1.3 | 3 |
| 1.4 | 4 |
| 1.5 | 5 |
| 1.6 | 1 |
| 1.7 | 2 |
| 1.8 | 3 |
| 1.9 | 4 |
| 1.10 | 5 |
| 1.11 | 1 |
| 1.12 | 2 |
| 1.13 | 3 |
| 1.14 | 4 |
| 1.15 | 5 |
| 1.16 | 1 |
| 1.17 | 2 |
| 1.18 | 3 |
| 1.19 | 1 |
| 1.20 | 5 |

The National e-learning Portal for The General Education

**1.** ஆ. 1. ✻ மொழிக்கு மூலகாரணமாக விளங்கும் எழுத்துக்கள் முதல் எழுத்துக்கள் ஆகும்.

| | |
|---|---|
| உயிரெழுத்துக்கள் | 12 |
| மெய்யெழுத்துக்கள் | 18 |
| | 30 |

✻ சொல்லில், மொழியில் முதல் இடத்தில் நிற்கும் எழுத்துக்கள் முதனிலை எழுத்துக்களாகும்.
உயிர் எழுத்துக்கள் 12 உம்
மெய் எழுத்துக்கள் 9 (க், ச், த், ப், ந், ம், வ், ய், ஞ்) உம் ஆக 21 எழுத்துக்கள் முதனிலையாக வரும்

2. நான் + ஐ = என்னை
நாம் + ஐ = எம்மை

3. பகுபதமாயினும் பகாப்பதமாயினும் ஒரு சொல் தனித்துநின்று ஒரு பொருளைத் தருவது ஒரு மொழியாகும்.
உ-ம் : தீ, மலர், வா, செய்
ஒரு சொல்லைத் தொடர்ந்து இன்னொன்றோ பலவோ வருமிடத்து அத்தொடர் பல பொருளைத் தருவதாக அமைவது தொடர் மொழி ஆகும்.
உ-ம் : தமிழாசிரியர், முருகக் கடவுள், மருதநிலம்

4. வினையடியாகப் பிறந்து வினையையும் வினைபுரியும் கருத்தாவையும் உணர்த்தும் பெயர் வினையாலணையும் பெயர் எனப்படும்.
உ-ம் : வந்தவன் வந்தவள்
வந்தானை வந்தவளால்

5. அடிப்படை உறுப்பாக அமைந்த வினையடையொன்று அடைமொழியால் / அடைமொழிகளால் தொடரப்பட்டு நிற்பது வினையடைத்தொடர் ஆகும்.
உ-ம் மிகக் கவனமாக
மிகமிகக் கவனமாக
எல்லோரையும் விடக் கவனமாக

(10 புள்ளிகள்)

**2.** (அ) சுருக்கம்
**சுருக்கத்தில் இடம்பெற வேண்டிய பிரதான விடயங்கள் :**

✻ மொழி ஒரு சமூகக்கலையாகும்.

✻ மிகப் பழங்காலம் முதல் இன்றுவரை மொழியொரு அருமையான கலையாக வளர்ந்துவருகிறது.

✻ ஏனைய கலைகளைப் போன்று மொழி ஒரு தனிப்பட்ட கலையல்ல.

✻ மொழியில் உள்ள ஒவ்வொரு சொல்லும் எல்லோரும் ஒத்துக்கொண்டால்தான் மொழியாக வாழ முடியும்.

✻ குடியரசு முறையில் மிகப் பழங்காலந்தொட்டு ஏற்பட்டுவரும் சமூகக்லை மொழிதான்.

(10 புள்ளிகள்)

(ஆ) கிரகித்தல்

(i) நாட்டை வளப்படுத்தவும் நம்மை வாழ வைக்கவும் தொழிற்கல்வி அவசியம்.

(ii) உத்தியோகக் கல்வியே நம் நாடடிற்குரிமையானது, மதிப்பிற்குரியது என்ற எண்ணம்

- உத்தியோக நோக்குடன் கல்வி பயிலுதல் வேண்டாம்.
- அறிவு விளக்கத்தின் பொருட்டுக் கல்வி பயிலுதல் வேண்டும்.

(iii) அறிவோம்பலுக்கு கல்வி வேண்டற்பாலது.
- அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது கல்வி.

(iv) சிறப்பு அறிவையும் பொது அறிவையும் பெற்றுக்கொள்ள முயலவேண்டும்.

(10 புள்ளிகள்)

**3.** அ. பேராசிரியர் சு. வித்தியானந்தரின் தமிழ்ப்பணிகள்

- வாழ்க்கைப் பின்னணி - காலம், கல்வி, பதவி
- நாட்டார் பாடல் மீட்புப்பணி
  அ. நாட்டார் பாடல் பேணுதல், அச்சிடல், ஆய்வு
  ஆ. நாட்டுக்கூத்து பேணுதல், நவீனமயப்படுத்தல், புத்துருக்கொடுத்தமை, அச்சிடல், ஆய்வு
- ஆய்வுப் பணி
  அ. ஆய்வு நூல்கள், கட்டுரைகள் (உ-ம் தமிழர் சால்பு)
  ஆ. ஆய்வு ......... உருவாக்கியமை
- உலகத் தமிழாராய்ச்சி மன்றம் சார்ந்த பணிகள்
  கட்டுரை வாசித்தமை
  1974 இல் 4 ஆம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கு உதவியமை.
  மட்டக்களப்பு தமிழாராய்ச்சி மாநாடு (1976),
  வன்னி மாவட்ட தமிழாராய்ச்சி மாநாடு (1983) ஆகியவற்றை நடாத்த உதவியமை.
- பல்கலைக்கழகம் சார் பணிகள்
  தனக்குப் பின் சிறந்த மாணவர் பரம்பரையைத் தோற்றுவித்தமை.
  யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தர்.
- தமிழ் மொழி இலக்கிய வளர்ச்சிக்கு பல்வேறு மதத்தினரும் ஆற்றிய பங்களிப்பை வலியுறுத்தியமை.

ஆ. நாட்டார் பாடல்களும் மக்கள் வாழ்க்கையும்

- நாட்டார் பாடல் பற்றிய விளக்கம்.

  மறுபெயர்கள் - பாமரர் இலக்கியம், வாய்மொழி இலக்கியம், எழுதாப்பாடல்கள்.

  பாமர மக்களது உள்ளத்து உணர்ச்சியை உயிராகக் கொண்டு வெளிப்படுவன நாட்டார் பாடல்கள் ஆகும். வாய்மொழிப்பாடல், கிராமியப் பாடல் போன்ற மறு பெயர்களால் அழைக்கப்படுகின்றமை.

- மக்கள் வாழ்க்கையுடன் நெருக்கமான பிணைப்பினைக் கொண்டவை. பிறப்பு முதல் இறப்பு வரையான வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் இணைந்திருத்தல் தாலாட்டுப்பாடல், தொழிற்பாட்டு, காதற் பாட்டு, ஒப்பாரிப் பாடல், விளையாட்டுப் பாடல், கும்மி, ஊஞ்சல், கோலாட்டம், சடங்குகளும் கடவுள் வழிபாடுகளும்.

- பிரதேச மண்வாசனை கொண்டிருத்தல், வழங்கப்படும் பிரதேசங்கள், பிரதேச வழக்குச் சொற்கள்.

- தமிழ் இசைக்கு நாட்டார் பாடலின் பங்களிப்பு திரையிசைப் பாடல்கள் பல நாட்டார் பாடல் மெட்டினைக் கொண்டிருத்தல்.
  உ-ம் : நானொரு சிந்து காவடிச்சிந்து
  மாங்குயிலே பூங்குயிலே
- கையாளப்படும் அணிகள், சொற்கள், இசை, சந்தம் போன்றவை மக்கள் வாழ்க்கையுடன் தொடர்புற்றிருத்தல்.

- பாரதியார் போன்ற கவிஞர்கள் நாட்டார் பாடல் அமைப்பை பின்பற்றி பாடியுள்ளமை.

- நாட்டார் பாடல் சேகரிப்பு முயற்சிகள்
  பேராசிரியர் சு. வித்தியானந்தன், வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம்,
  எப்.எக்ஸ்.சி. நடராசா போன்றவர்கள்.

முடிவுரை - நாட்டார் பாடல் மரபு தொடர்ந்து பேணப்படுவதும், அடுத்த சந்ததியினருக்கு கையளிக்கப்படுவதும் அவசியமாகும்.

இ. மனித வாழ்வும் சூழலும்

- சூழல் என்பதற்கான விளக்கம், அதன் பிரிவுகள்
  (பௌதிகச் சூழல், பண்பாட்டுச் சூழல்)

- சூழலுக்கும் மனிதனுக்குமிடையே உள்ள நெருங்கிய தொடர்பு
  சூழல் மனிதனின்
  பொருளாதாரம்,
  வாழ்க்கை முறை
  பண்பாடு என்பவற்றில் கொள்ளும் பங்கு

- இன்று மனிதன் சூழலை வெற்றிகொள்ள மேற்கொள்ளும் முயற்சிகள்.
- சூழல் மாசடைதலும் மனித வாழ்வு பாதிப்புறுதலும்.

முடிவுரை - சூழலைப் பாதுகாப்பதன் இன்றைய தேவைப்பாடு

ஈ. இலத்திரனியல் ஊடகங்களின் சமூகப் பொறுப்பு

- வெகுசன ஊடகங்கள் பற்றிய அறிமுகம்.

- அவற்றின் வேகமான வளர்ச்சி.

- வெகுசன ஊடகங்களில் இலத்திரனியல் ஊடகத்தின் பங்கு.

- சமூகத்தை வழிப்படுத்துவதில் இலத்திரனியல் ஊடகங்களின் முக்கிய பொறுப்புகள்.

- இலத்திரனியல் ஊடகங்களால் ஏற்படும் **நன்மைகள்.**
  * அறிவு சிந்தனையாற்றல் வளர்ச்சியடைதல்.
  * பொழுதுபோக்கு சாதனம்
  * கலையுணர்வுக்கு விருந்தளித்தல் (ஆக்கலுக்கும், இரசனைக்கும்)
  * தகவல்களை வேகமாகப் பரம்பலடையச் செய்தல்.
  * நேரவிரயம் தவிர்க்கப்படல்.
  * பணவிரயம் தவிர்க்கப்படல் - E - bank, E - commerce

- இலத்திரனியல் ஊடகங்களால் ஏற்படும் **தீமைகள்.**
  * அளவுக்கதிகமான பாவனையால் மாணவர் கல்வி பாதிப்படைதல்.
  * இயல் சார்ந்த படைப்புக்களின் செல்வாக்கு குறைவடைதல்.
  * பாரம்பரிய கலைகளின் செல்வாக்கு குறைவடைதல். (கூத்து, மேடை நாடகம் போன்றன)
  * கலாசார பண்பாட்டு விழுமியங்கள் பாதிப்படைதல்.
  * இளைஞர் சமூகத்தின் நெறி பிறழ்வுக்கு காரணியாக அமைதல். (போதைப் பழக்கம், வன்முறைகள், துஷ்பிரயோகம் போன்றன.)

- தீமைகளைக் களைந்து நன்மைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து சமூகத்தை நெறிப்படுத்தல்.

உ. இளைஞர் சமூகம் எதிர்கொள்ளும் சவால்களும் தீர்வுகளும்.

- அறிமுகம் - இளைஞர் சமூகத்தின் இன்றைய நிலை.
- பொருளாதார ரீதியான சவால்கள்
  - வேலை வாய்ப்புக்களைப் பெறமுடியாமை.
  - குறைந்த சம்பளத்திற்கு வேலை செய்ய வேண்டிய நிலை.
  - வேலை வாய்ப்புக்களைப் பெறமுடியாமை.

[ பக் 4 ஐப் பார்க்க

- சமூக ரீதியான சவால்கள்
    - சமூகத்தவரால் புறக்கணிக்கப்படுதல்.
    - போதைவஸ்துக்களுக்கு அடிமையாதல்.
    - துஷ்பிரயோகங்களுக்கு உட்படுதல்.

- குடும்ப ரீதியான சவால்கள்
    - தங்கி வாழ்தல்
    - குடும்பச் சுமையை ஏற்றல்
    - மனமுறிவுகள் (16 புள்ளிகள்)

- தனிமனித சவால்கள்
    - உளரீதியான பாதிப்புக்கள்
        - நெருக்கீடுகள்
        - தனிமைப்படுத்தப்படல்
        - தன்னம்பிக்கை இழத்தல்.

- தீர்வுகள்
    - இளைஞர்களுக்கான தொழில் வழிகாட்டல்களை மேற்கொள்ளல்.
    - வேலைவாய்ப்புக்களை வழங்குதல்.
    - தொழில் உலகிற்குப் பொருந்தக்கூடிய கல்வியை வழங்குதல்.
    - சமூக விழிப்புணர்வு
        - பரஸ்பர புரிந்துணர்வு
        - இளைஞர்களுக்கான வலுவூட்டல்.

- முடிவுரை

## பகுதி II
## பகுதி 'அ'

4. அ. • சங்கப்புலவர்கள் தமது அகத்திணைச் செய்யுள்களின் உயிர் நிலையான உரிப்பொருளைச் சித்திரிப்பதற்கு கருப்பொருளாகிய இயற்கையினைக் கையாண்டனர்.

- சங்க அகத்திணையில் மக்கள் வாழ்ந்த பிரதேசங்களின் இயற்கைத் தன்மைக்கு ஏற்ப உரிப்பொருளாகிய ஒழுக்கங்கள் அமைந்திருந்தமை. (நிலம் - ஒழுக்கம் குறிப்பிடவேண்டும்)

- சங்க இலக்கியங்களின் பெயர்கள் இயற்கையோடு ஒட்டியதாக அமைந்திருந்தமை.
  உ-ம் : குறிஞ்சிப் பாட்டு, முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை, நெடுநல்வாடை

- சங்க இலக்கியங்களில் புலவர்கள் கையாண்ட உள்ளுறை உவமம், இறைச்சி போன்றவற்றில் இயற்கை கையாளப்பட்டமை.
  உ-ம் : செம்புலப் பெயனீர் போல....
  சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு....

- பாரி, முல்லைக்குத் தேர் கொடுத்தமை, பேகன் மயிலுக்குப் போர்வை கொடுத்தமை போன்ற செய்திகள் காணப்படுகின்றமை. (05 புள்ளிகள்)

ஆ. • அறக் கருத்துக்களை மக்களுக்குக் கூறி அவர்களை நல்வழிப்படுத்த முயன்றமை.
  உ-ம் : சோழன் குளமுற்றத்து துஞ்சிய கிள்ளி வள வனிடம் வெள்ளைக் குடி நாகனார்
  "கோள் சொல்வோர் பேச்சைக் கேளாது உழவர்களைக் காப்பாயாக" என வேண்டுதல்.

- போரின் விளைவுகளைக் கூறி நல்லறிவூட்டி போரைத் தடுத்து நிறுத்தியமை
  உ-ம் : கோவூர்க் கிழார், சோழன் நிலன்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் இடையிலான
  போரைத் தடுத்து நிறுத்தியமை. "நின்ன கண்ணியும் மார்படைத்தன்றே"

[ பக் 5 ஐப் பார்க்க

- பகை நாடு எதிர்கொள்ளும் துன்பத்தை எடுத்துக்காட்டி மறைமுகமாகப் போரைச் செய்யாதே என நல்லறிவூட்டியமை
  உ-ம் : "தாயில் துவாக் குளவி போல
  துவாது கூஉம் நின் உடற்றியோர் நாடே"
- அதியமானுக்காக ஔவையார் தொண்டமானிடம் இடித்துரைத்தல்.

(05 புள்ளிகள்)

இ. • தனிப்பாடல் வடிவங்களில் இருந்து தொடர் நிலைச் செய்யுள் வடிவங்கள் தோன்றின. (ஐங்குறு நூறு, கலித்தொகை முதலிய தொடர்நிலைச் செய்யுள்கள் திருக்குறள் முதலிய தொடர்நிலைச் செய்யுள்கள் தோன்ற வழிகாட்டியமை.)

- சங்க காலத்தில் அகத்திணை மரபில் காணப்பட்ட தூதில் இருந்து, தூதுப் பிரபந்த வடிவங்கள் தோன்றின.
  உ-ம் : பல்லவர் காலம் - தேவாரம் - சிறையாரும் மடக்கிளியே..
  சோழர் காலம் - நெஞ்சுவிடுதூது
- சங்க அகத்திணையில் பெருந்திணையின் ஒரு துறையான மடல் ஏறுதல் பல்லவர் கால பெரிய திருமடல், சிறிய திருமடல் தோன்றக் காரணமாய் இருந்தன.
- பிற்காலத்தில் பதிக வடிவம் உருப்பெற பதிற்றுப்பத்து இலக்கியம் வழிகாட்டியாக அமைந்தது.
- சங்ககால புறப் பொருள் மரபைப் போற்றிய புறநானூற்றுப் பாடல்கள் பரணிப் பிரபந்தங்கள் தோன்றக் காரணமாய் இருந்தன.
- சங்ககாலத்தில் ஆற்றுப்படை ஒரு துறையாக இருந்தது. ஆற்றுப்படை, இலக்கியமாக உருப்பெற்று பிற்காலத்தில் சமூக கலாசாரத்தை விளக்கும் ஆற்றுப்படை நூல்கள் தோன்ற ஏதுவாயின.

  உ-ம் : காதலியாற்றுப்படை

**5.** அ. • பெருங்காப்பியங்கள் - சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி

சிறுகாப்பியங்கள் - நீலகேசி, சூளாமணி, யசோதர காவியம், நாககுமார காவியம், உதயணகுமார காவியம்

புராணங்கள் - பெரியபுராணம், கந்தபுராணம்

(05 புள்ளிகள்)

ஆ. • சோழப் பொருமன்னர்கள் ஆட்சி இமயம் தொடங்கி குமரி வரைக்கும் நீண்டு அமைந்து காணப்பட்டமையும் இதனால் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து கலைகள் ஓங்கி செல்வம் நிறைந்து காணப்பட்டமையும்.

- உள்ளத் துடிப்பும் உணர்ச்சிப் பெருக்கும் வாய்க்கப்பெற்ற உத்தம புலவர்களின் தோற்றம்.
- அக்காலத்தில் உறுதியான ஆட்சி நிலவியமை.
- புலவர்களை ஆதரிக்கும் புரவலர்கள் அக்காலத்தில் அதிகமாக காணப்பட்டமை.
- மன்னர்கள் தமிழ் மீது கொண்டிருந்த அளவு கடந்த பற்று.
- அரசர்கள் புகழ் விரும்பிகளாக இருந்தமை.
- சமயப் பொறை காணப்பட்டமை.
- சோழர் கால சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பு சிறப்பாகக் காணப்பட்டமையால் பாடு பொருள் விரிவுபட்டு காணப்பட்டமை.
- வடமொழிக் கல்வி விருத்தியும் காவியப் பாடசாலைகளின் தோற்றமும்.

(05 புள்ளிகள்)

[ பக் 6 ஐப் பார்க்க

| | சோழர் கால இலக்கியப் பண்புகள் | விஜய நகர நாயக்கர் கால இலக்கியப் பண்புகள் |
|---|---|---|
| * | உலகியலுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் போக்கு காணப்பட்டது. | சிற்றிலக்கியங்களும், தனிப்பாடல்களும் பெருமளவில் தோற்றம் பெற்றன. |
| * | அரசர்களை பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு அவர்களைச் சிறப்பித்து பாடும் சிற்றிலக்கியங்கள் தோற்றம் பெற்றன. | அதிகளவு தல வரலாற்றைக்கூறும் புராணங்கள் தோற்றம் பெற்றன.<br>உ-ம் : திருவானைக்காப் புராணம்<br>திருச்செந்தூர்ப் புராணம் |
| * | காவியங்கள் முதலிய பேரிலக்கியங்களுள் தோற்றம் பெற்றன. | தத்துவச் சார்பிற்கு முக்கியம் கொடுக்கும் போக்கு காணப்பட்டது. |
| * | பெரிய புராணம், கந்த புராணங்கள் காவிய அடிப்படையில் எழுந்தன. | கடவுளரைத் தலைவராகக் கொண்டு அவர்களை வியந்து பேசும் சிற்றிலக்கியங்கள் தோற்றம் பெற்றன. |
| * | புதிய இலக்கிய வகைகளின் தோற்றம். | வசைக் கவிகள் அதிகளவில் தோற்றம் பெற்றமை.<br>உ-ம்: காளமேகப் புலவர் |
| * | விருத்தப்பா யாப்பு பெரிதும் கையாளப்பட்டமை. | விருத்தப்பா யாப்புடன் யமகம், திரிபு, மடக்கு முதலியன கையாளப்பட்டன.<br>பழமை பேணுந் தன்மை அதிகம். |

(15 புள்ளிகள்)

**6.** அ.
- 19 ஆம் நூற்றாண்டில் பழைய இலக்கண இலக்கிய நூல்கள் அச்சிடப்பட்டமையால் மக்கள் பண்டைத் தமிழின் சிறப்பை உணர்ந்தமை.
- மேலைத்தேயத்தார் தம் மொழிவளத்தை மேம்படுத்த முனைந்தது போல தாமும் முயன்றமை.
- 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்குரியவர்களாக வேத நாயகம்பிள்ளை, இராஜமையர், சுந்தரம் பிள்ளை ஆகியோரின் இலக்கியங்கள் 20ஆம் நூற்றாண்டுச் செல்நெறிக்கு வழிகாட்டியமை.
- கல்வியில் விருத்தியும் பரவலாக்கமும் ஏற்பட்டமை.
- நிலமானிய முறை சிதைவடைந்தமையும் மத்திய தரவர்க்கத்தின் எழுச்சியும்.
- விஞ்ஞானம் வளர்ச்சியடைந்தமையும் விஞ்ஞான விடயங்கள் பெருமளவு, மக்களால் அறியப்பட்டமையும்.
- உலகளாவிய ரீதியில் தாக்கம் செலுத்திய உலகப் போர்களின் பாதிப்புக்கள்.
- இந்திய சுதந்திரப் போராட்டத்தின் எழுச்சியும் விரிவாக்கமும்.
- அரசியல் அறிவும் அரசியல் ஈடுபாடும் பொதுமக்கள் மத்தியில் அதிகரித்தமை.
- பொதுவுடைமைக் கொள்கையின் பரவலாக்கம்.
- பதிப்புத் துறையின் வளர்ச்சி.

(05 புள்ளிகள்)

ஆ. உள்ளடக்கம்

- சமகால சமூக, அரசியல் தனிமனித உயர்வுகள் விருப்பு வெறுப்புக்களைப் பேசுபொருளாகக் கொள்ளல்.
- நாட்டுப்பற்று, மொழிப்பற்று முதலியவற்றைப் பிரதிபலிப்பவை.
- அறிவியல் விடயங்களை வெளிப்படுத்துவன.
- சாதாரண மக்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டமை.
- சமூக நீதி, சமத்துவம் என்பவற்றுக்குக் குரல் கொடுப்பவை.

[ பக் 7 ஐப் பார்க்க

உருவம்

- எளிமையான நடையும், சந்தமும் கொண்டமைந்தவை.
- பேச்சு ஓசையும், எளிய சொற்களின் பயன்பாடும்.
- குறியீடு, படிமம் முதலிய உத்திகளின் பயன்பாடு.
- யாப்பமைதி, ஓசையொழுங்கு - சிந்து, கண்ணி, தெம்மாங்கு முதலிய எளிமையான யாப்பு வகைகளின் பயன்பாடு.
- மரபார்ந்த கட்டுப்பாடுகளைப் புறந்தள்ளியது.
- புதிய அமைப்புக்களின் மேலைத்தேய இலக்கியக் கோட்பாடுகளைத் தழுவி அமைதல்.

(05 புள்ளிகள்)

இ. உள்ளடக்க மாற்றம்

- பொது மக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பொது சனத்தையும் சமூகத்தையும் பாடுபொருளாகக் கொண்டு பாடல் பாடியமை.
- காதல், பக்தி, புகழ்ச்சி, இயற்கை வர்ணனை என்பவற்றைப் பாடியதோடு நாட்டுவிடுதலை, சமூகவிடுதலை எனும் மானுடப் பிரச்சினைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்தமை.
- சாதி ஒழிப்பு, பெண்ணடிமை ஒழிப்பு, சமத்துவம்.
- கண்ணனைச் சேவகனாகப் பாடுதல்.
- மொழியுணர்வு, தேசிய உணர்வுமிக்க பாடல்கள்.
- குழந்தைகளுக்கு ஊக்கமளிக்கக் கூடிய பாடல்கள்.

உருவ மாற்றங்கள்

- எளிய பதங்கள், எளிய நடை, எளிய சந்தம், பொதுமக்களைக் கவரும் மெட்டு என்பவற்றைக் கையாண்டமை.
- வெண்பா, விருத்தம் போன்ற மரபுப் பா வடிவங்களை எளிமையாகக் கையாண்டமை.
  கண்ணி, சிந்து, கும்மி, தெம்மாங்கு போன்ற பா வடிவங்களையும் சேர்த்துக் கொண்டமை.
- நாட்டுப்புற மெட்டுக்கள், ஓசை நயங்கள் தன் கவிதைகளில் பயன்படுத்தியமை.
- வசன கவிதைகள்.
- புதுக்கவிதைகளின் தோற்றம்.

(05 புள்ளிகள்)

## பகுதி 'ஆ'

**7.** அ. சோதிட நூல்கள் - சரசோதிமாலை
செகராசசேகரமாலை

வைத்திய நூல்கள் - செகராசசேகரம்
பரராசசேகரம்

வரலாற்று நூல்கள் - வையாபாடல்
கைலாயமாலை
கோணேசர் கல்வெட்டு

தலபுராணங்கள் - தக்ஷ்ண கைலாயபுராணம்
திருக்கரசைப் புராணம்

மொழிபெயர்ப்பு - இரகுவம்சம்

பொதுமக்கள் சார்பு இலக்கியம் - கதிரமலைப் பள்ளு
கண்ணகி வழக்குரை

(05 புள்ளிகள்)

[ பக் 8 ஐப் பார்க்க

ஆ. • அரசியல் மாற்றம் - யாழ்ப்பாணத் தமிழ் மன்னரின் வீழ்ச்சியும் போர்த்துக்கேயரின் வருகையும்.

• கத்தோலிக்க மதத்தை வலிந்து பரப்பியமையும் அதனால் சைவ பண்பாட்டு அம்சங்கள் புறந்தள்ளப்பட்டமையும்.

• சமயரீதியிலான அடக்குமுறைகள்.

• மரபுவழிக் கல்வியின் வீழ்ச்சி. இக்காலத்தில் வழங்கப்பட்ட கல்வி வேதாகமத்தை வாசித்து விளங்கிக் கொள்ளக்கூடிய வாசிப்புக் கல்வியாக அமைந்தமை.

• போர்த்துக்கேயரின் ஆட்சி மிகக் குறுகிய கால ஆட்சியாக அமைந்தமை. - (37 ஆண்டுகள்)

(05 புள்ளிகள்)

இ. • ஒல்லாந்தர்கள் தேசவழமையை அங்கீகரித்தமையால் யாழ்ப்பாண மன்னர் காலத்தில் நிலவிய சமூக அமைப்பு அதன் கட்டிறுக்கம் பேணப்படும் தன்மை உருவாகியமை.

• தேசவழமைச் சட்டத்தின் விளைவாக ஒல்லாந்தரின் அதிகாரப் பதவிகள் உள்ளூர் பிரபுக்களுக்கு வழங்கப்பட்டமை.

• நிலத்தையும் அதிகாரத்தையும் கொண்ட பிரபுக்கள் தமது பண்டைய நிலையை நிலைநிறுத்தவும் ஆளும் வர்க்கத்தின் அங்கீகாரத்தைப் பெறவும் தமது இயற்பெயருக்கு முன்னால் கிறிஸ்தவ நாமத்தையும் பின்னால் உடையார், முதலியார் என்ற பதவி (பரம்பரைப் பெயர்)ப் பெயரையும் வைத்துக் கொண்டமை.

• தமது அதிகாரத்தை, செல்வாக்கை நிலை நிறுத்துவதற்காக தம் புகழ்பாடும் இலக்கியங்கள் தோன்றுவதற்கு ஊக்கமளித்தமை.

• கரவைவேலன் கோவை கரவெட்டி நிலப்பிரபுவான வேலாயுத முதலியை (வேலாத்தை உடையார்ப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு நல்லூர் சின்னத்தம்பி புலவரால் பாடப்பட்டது.

• மரவைச் சின்னக்குட்டிப் புலவர் தண்டிகைக் கனகராய முதலியைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அவரது சீர் சிறப்புக்களையும் இருப்பையும் நியாயப் படுத்தப் பாடியது தண்டிகைக் கனகராயன் பள்ளு ஆகும்.

(05 புள்ளிகள்)

**8.** (அ) • ஆங்கிலேயரின் ஆட்சியின் பயனாக ஏற்பட்ட மாற்றங்கள்.
- அச்சியந்திர வருகையும் பதிப்பு முயற்சிகளும்
- இலவசக் கல்வி
- ஆங்கிலக் கல்வி
- உரை நடை வளர்ச்சி
- மேலைத்தேய இலக்கியப் பரிச்சயம்
- இலக்கியம் பற்றிய புதிய சிந்தனைப் போக்கு
- மொழிபெயர்ப்பு முயற்சிகள்

• தமிழக சஞ்சிகைகளினது செல்வாக்கு
- தமிழக சஞ்சிகைகளில் சிறுகதை ஆசிரியர்களது செல்வாக்கு
- தமிழக சஞ்சிகைகளில் ஈழத்துச்சிறுகதை ஆசிரியர்களது செல்வாக்கு

• ஜனநாயக மயப்படுத்தப்பட்ட நவீன கல்வி

• தனிமனிதன், சமூக, அரசியல், பொருளாதார ரீதியாகப் பெறும் முக்கியத்துவம்.

• தேசிய பத்திரிகைகளின் வரவு

• உலகமயமாதல் காரணமாக சிறுகதைப் போக்கில் ஏற்பட்ட மாற்றம்.

• ஆக்க இலக்கியங்களுள் சிறுகதைமீது வாசகர்கள் கொண்ட நாட்டம்.

[ பக் 9 ஐப் பார்க்க

(ஆ)
- சரித்திர, புராண, சமூக சிறுகதைகள் இக்காலகட்டத்தில் தோற்றம்பெற்றமை.
- காவியப்பாங்கான, அலங்கார மொழிநடை.
- ஆண் பெண் உறவு அல்லது பாலுறவுக் கதைகள்.
- தமிழக சிறுகதைகளின் தாக்கம்.
- உணர்ச்சி மிகைப்பு நிரம்பியமை.

(இ)
- யாழ்ப்பாணத்திலுள்ள ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.
- இயற்பெயர் ந.சிவஞானசுந்தரம்.
- இலங்கைத் தமிழ் சிறுகதை முன்னோடிகளுள் ஒருவர்.
- முதற் சிறுகதை - மரியா மதலேனா
- வரலாறு சார்ந்த சிறுகதைகள்.
  - கடற்கோட்டை, மணற்பரிசு, அநுலா, சிகிரியா, மரியா மதலேனா, யாழ்பாடி, மேனகை
- சமூகக் கதைகள்
  - வெள்ளிப் பாதசரம்
  - ஒருநாள்
  - தாய்
  - ஓரிரவு
  - மச்சாள்
  - சதிர்காரி
  - முதற்சம்பளம்
  - மனிதக் குரங்கு
  - வஞ்சம்
  - நாடோடி
  - பாரதத்தாய்
  - தந்தை மனம்
  - அநாதை
  - தாழை நிழலிலே
- சிறுகதைகளின் சிறப்பம்சம்
  - ஆண் பெண் உறவு நிலைகளைச் சித்திரித்தமை.
  - பிரதேசப்பாங்கு துல்லியமாக எடுத்துக்காட்டப்பட்டமை.
  - யதார்த்தப் பண்பு விளங்குகின்றமை.
  - பேச்சுவழக்கை இயல்பாக பயன்படுத்தியமை.
  - கிராமிய வாழ்க்கை முறைமையை எடுத்துக்காட்டியமை.

(15 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education